RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s22219

OPEN ACCESS

# தமிழர் மரபில் கலைமகள் வழிபாடு

**க. புவனேஸ்வரி** [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, தேசியக்கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620001, தமிழ்நாடு, இந்தியா

# Worship of Goddess Kalaimagal (Saraswathi) in Tamil Tradition

**K. Bhuvaneswari** [a, *]

[a] Department of Tamil, National College (Autonomous), Tiruchirapalli-620001, Tamil Nadu, India

* Corresponding Author: bhuvanesk@nct.ac.in

Received: 27.09.2022
Revised: 10-11-2022
Accepted: 17-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

Kalaimagal is worshipped as the God of education and the arts. In the early days, Kalaimagal worship was not part of the Tamil tradition. However, Goddess Kalaimagal worship has become inevitable in modern worship. The number of students praying and worshipping Goddess Saraswathi to pass the exams has increased today. This study examines the Koothanur temple, which is dedicated to Goddess Kalaimagal in Tamil Nadu, the worship practices performed there, and the views expressed by Kambar, Kumaragurubarar, Ottakoothar, Bharathiar, etc., who were the best in life by praising Kalaimagal and, thus, got rid of their sufferings in their lives. In today's context, it has been suggested that the worship of Kalaimagal occupies an essential place in the tradition of worship of the Tamils.

**Keywords:** Kalaimagal, Worship, Bharathiar, Saraswathi

## முன்னுரை

மனிதன் தோன்றிய நாள்முதல் தற்போது வரை ஏதோ ஒரு சக்தி தனக்கும் மேலே இருக்கிறது. அதுவே நம் அனைவரையும் ஆள்கிறது என்று நம்புகிறான். இந்த நம்பிக்கையே வழிபாடாக மாறுகிறது. ஆதிமனிதன் தன்னை அச்சுறுத்திய அனைத்தையும் வழிபட்டான். அதிலிருந்து சிறிது சிறிதாக மாற்றமும் ஏற்றமும் பெற்றுப் பல்வேறு விதமான வழிபாட்டு முறைகள் தோன்றின. தமிழகத்தின் வழிபாட்டு முறைகளுள் தலைமை சான்றதாகத் திகழ்வது கோயில் வழிபாடே ஆகும். அதன்படி பல்வேறு தெய்வ வடிவங்களைச் சிலைகளாக வடித்து அவற்றைக் கோயில்களில் பிரதிஷ்டை செய்து வழிபட்டனர்.

கல்வி மற்றும் கலைகளுக்கு உரிய தெய்வமாகத் திகழ்பவள் சரஸ்வதி தேவி ஆவாள். இவளை “கலைமகள்” என்கிறோம். ஆதிகாலத்தில் கலைமகள் வழிபாடு இருந்ததாகத் தெரியவில்லை. இடைக்காலத்திற்குப்பின் கலைமகளை வழிபாடும் வழக்கம் தோன்றியிருக்கலாம். எனினும் தற்காலத்தில் இவ்வழிபாடு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. எனவே கலைமகள் வழிபாட்டைப் பற்றியும், கலைமகளைப் பாடிப்பணிந்து அருள் பெற்றோர்கள் பற்றியும் இக்கட்டுரையின் வாயிலாக ஆராய்ந்து அறிவோம்.

## கல்விக் கடவுள்

காலங்காலமாகச் சரஸ்வதி தேவிக்கெனப் பல தனிச்சிறப்புகள் உண்டு. அதில் முதன்மையானது அவள் அறியாமை எனும் இருள் அகற்றி அறிவு எனும் ஞான ஒளியை வழங்குபவள் என்பதாம்.

“தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த

கல்வியுந் சொற்சுவை தோய்

வாக்கும் பெருகப் பணித்தருள்

வாய் வட நூற்கடலும்

தேய்க்கும் செந்தமிழ்ச் செல்வமும்

தொண்டர் செந்நாவலென்று” (Balasubramaniyan, 2005)

என்று கல்விக்குரிய கடவுளாக சரஸ்வதி தேவி போற்றி வணங்கப்படுகிறாள். பக்தர்களின் நாவில் நின்று அழியாத கல்விச்செல்வத்தை வழங்குவதால் “கலைமகளை வாகீஸ்வரி” என்கிறோம்.

## கலைகளின் உறைவிடம் கலைமகள்

கல்வி எனும் மிகப்பெரிய செல்வத்தோடு 64 கலைகளுக்கும் அதிபதியாகத் திகழ்பவளும் அவளே. எனவேதான் கலைகளுக்கெல்லாம் தலைவியாகத் திகழும் அவளை “கலைமகள்” என்று அழைக்கின்றோம்.

“ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்

ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய

உருப்பளிங்கு போல்வாள் என் உள்ளத்தின் உள்ளே

இருப்பள் இங்கு வாராது இடர்” (Rajagopalachariyar, 2002)

காவியம், இதிகாசம், நாடகம், சிற்பம், நாட்டியம், வீணை, சோதிடம், வைத்தியம், கணிதம் என்று பற்பல துறைகளையும் உள்ளடக்கியவையே 64 கலைகள் ஆகும். அந்தக் கலைகளுக்கெல்லாம் அதிபதியாகவும் திகழ்பவள் சரஸ்வதியே எனவே அவளை வணங்கக் கல்வியும் ஞானமும் கலை ஆற்றலும் பெருகும் என்பது மக்கள் நம்பிக்கை.

## சரஸ்வதி வழிபாடு

பெண் தெய்வ வழிபாடு என்பது பழங்காலத்தில் இருந்து இன்றுவரையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதில் தற்காலத்தில் மாணவர்களால் அதிகமாக, பூசிக்கவும், நேசிக்கவும்படும் பெண்தெய்வம் சரஸ்வதியே ஆவாள். அவளை நாள்தோறும் வழிபாட்டால் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கலாம் என நம்புகின்றனர்.

“தானெனும் பேய்கெடவே - பல

சஞ்சலக் குரங்குகள் தலைப்படவே

வானெனும் ஒளிபெறவே - நல்ல

வாய்மையி லேமதி நிலைத்திடவே

வானெனப் பொழிந்திடுவர்” (Ramaluctumanan, 2011)

மனிதனை சஞ்சலம், ஆணவம் போன்ற துன்பங்களில் இருந்து விடுவித்து உண்மை அறிவைப்பெற உதவுபவள் சரஸ்வதியே என்று போற்றுகின்றார் பாரதியார்.

## சரஸ்வதி கோயில்கள்

கலைமகளுக்கெனத் தனிக்கோயில் தமிழகத்தில் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள கூத்தனூரில் அமைந்துள்ளது. இது போன்று பல திருத்தலங்களில் சரஸ்வதிக்குத் தனி சந்நிதிகள் உள்ளன.

திருவாரூர் "அட்சரபீடம்" என்று தியாகராஜ சுவாமி கோயிலும் வாணியம்பாடியில் பேசும் சக்தியை இழந்தவாணி எனும் பெண்ணைப் பேச வைத்த ஊர் வாணியம்பாடி.

உத்தமர் கோயிலில்: திருச்சிக்கு அருகில் மும்மூர்த்திகளும், தங்கள் தேவியரோடு அருள் பாலிக்கின்றனர். கண்டியூர்: அட்டவீரட்டானத் தலங்களில் ஒன்றான இது திருவையாருக்கு அருகில் உள்ளது. இங்கே பிரம்மாவின் அருகில் சரஸ்வதி அமர்ந்துள்ளாள். காஞ்சியில் கைலாசநாதர் கோயிலில் மூன்று இடங்களில் சரஸ்வதி திருத்தலம் உள்ளது. சொன்ன வண்ணம் செய்த பெருமாளின் பாதத்தின் அருகில் அமர்ந்தவாறு காஞ்சி காமாட்சி ஆலயங்களில் காட்சியளிக்கின்றாள். கையில் வீணை இல்லாத நிலையில் மதுரை மீனாட்சி ஆலயத்தில் காட்சி அளிக்கின்றாள் சரஸ்வதி.

## கூத்தனூர் சரஸ்வதி கோயில்

தமிழ்நாட்டில் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள கூத்தனூரில் அமைந்துள்ளது புகழ்பெற்ற சரஸ்வதி கோயில் ஆகும். ஒட்டக்கூத்தர் பிறந்த ஊர். ஆகையால் கூத்தன் + ஊர் = கூத்தனூர் என ஆயிற்று. இங்குள்ள சரஸ்வதி கோயிலில் உள்ள பலகையிலே மாணவர்கள் தங்கள் தேர்வு என்னை எழுதிவிட்டு,

"சாத்திரங்கள் புகழ்கின்ற செந்தமிழின் தலைமகளே!

சாத்திரத்தைப் படைத்திடவே அருள்தருவாய் கலைமகளே!

கும்பிடுவார் குறைகளெல்லாம் களைகின்ற குளிர்மதியே!

மாதவத்தால் உன்னைத்தேடி மனமுருகி வந்து நின்றோம்!

மறைகளெல்லாம் கற்றவர்போல் வரவழைப்பாய் அம்பிகையே!

காத்து நிற்கும் கல்லார்க்குக் கடவுள் கண்பார்ப்பாய்!

கலைகளெல்லாம் மிளிர்கின்ற கலன் முகத்தாள் சரஸ்வதியே!" (Siva Kanniappan, 1998)

எனும் இந்தப் பாடலைப் படித்துவிட்டுப் பின்தேர்வு எழுதச் செல்வது பழக்கம். இப்படிச் செய்து வழிபட்டால் தேர்வில் நல்ல மதிப்பெண் பெற இயலும் என்பது அவர்களது நம்பிக்கை.

## சரஸ்வதி பூஜை

கலைமகள் ஞானம், கல்வி, கேள்வி, பேச்சு, சங்கீதம் - சாகசம் என்று அனைத்திற்கும் அதிபதியாகத் திகழ்பவள். அவளைப் பூசித்து நாம் வேண்டும் யாவையும் பெறும் திருநாளே சரஸ்வதி பூஜையாகும். சரஸ்வதியின் பல பெயர்களில் ஒன்றுதான் "சாரதா" என்பதும் பல இடங்களில் நவராத்திரி பத்து நாளும் "சாரதா நவராத்திரி" என்று கொண்டாடப்படுகிறது. சில இடங்களில் நவராத்திரியின் 7, 8, 9 ஆம் நாட்கள் சரஸ்வதி வழிபாடு மேற்கொள்ளப்படுகிறது எனினும் பலராலும் நவராத்திரியின் 9ஆம் நாளை சரஸ்வதி பூஜை என்று கொண்டாடப்படுவதே பழக்கம்.

"கலைபல தந்துயர்த்தும் தேவியவளே

மனயாயன வந்திருக்கும் அறியாமையும்

களைந்தே மகிழ்ந்திருக்கும் அறிவுத்திறனை

நிலைத்திட என்னுள் வந்துறைய வேணுமடி தாயே" (Nadarajan, 2011)

என்று வீடுகளில் சரஸ்வதிக்குப் பூசை செய்து, வழிபடுவதோடு மட்டுமின்றி, தங்களின் தொழில்களுக்கும் உதவும் ஆயுதங்களையும் பூசைகளில் வைத்து மக்கள் இன்றளவும் வழிபட்டு வருகின்றனர்.

## கலைமகளை வழிபட்டுச் சிறந்தவர்கள்

பொதுவாக அனைவருக்குமே கலைவாணியின் அருள் தேவையானதே. அப்படியிருக்க இலக்கிய உலகிலும், பக்தி நிலையிலும் பலர் கலைமகள் உபாசகராக, அவளைப் போற்றிப் பல படைப்புகளைத் தந்துள்ளனர். அவர்களுள் கம்பர், பாரதி, குமரகுருபரர், ஒட்டக்கூத்தர் ஆகியோர் முதன்மையானவர்கள்.

## கம்பர்

“கவிச்சக்கரவர்த்தி” என்றும், “கல்வியில் சிறந்தவர்” என்றும் போற்றப்பெறும் கம்பருக்குஎப்பொழுதெல்லாம் இன்னல் ஏற்பட்டதோ அப்போதெல்லாம் ஓடிச்சென்று உதவியவள் கலைவாணியே.

“வணங்கும் சிலை நுதலும் கழைதோளும் வனமுலைமேல்

சுணங்கும் புதிய நிலவெழு மேனியும் தோட்டுடனே

பிணங்கும் கருந்தடங் கண்களும் நோக்கில் பிரம்மன் அன்பால்

உணங்கும் திருமுன்றி வாய்மறை நான்கும் உரைப்பவளே” (Rajagopalachariyar, 2002)

அப்படி சோழமன்னரிடமிருந்து கருத்து வேறுபாட்டால் அங்கிருந்து சென்று சேரனிடம் அடைப்பகாரராக வாழும் சமயத்தில் அவருக்கு வந்த ஒரு மிகப்பெரிய துன்பத்தை கலைமகள் அருளால் தகர்த்தெறிகிறார் கம்பர். அப்போது அவர் பாடியதே “சரஸ்வதி அந்தாதி” ஆகும்.

## குமரகுருபரர்

குழந்தைப் பருவத்திலேயே ஞானம் பெற்ற குமரகுருபரர் டில்லி பாதுஷாவோடு பேசுவதற்கு அந்நாட்டு மொழியான “இந்துஸ்தானியை” அறிய கலைமகளை வேண்டிப்பாடுகிறார்.

“அஞ்சத்துவசம் உயர்ந்தோன்

செந்நாவும் சுகமும் வெள்ளைக்

கஞ்சத்தவிசு ஒத்து இருந்தால்

சகலகலாவல்லியே” (Balasubramaniyan, 2005)

என்று அன்னையாம் கலைமகளைப் போற்றிப் புகழ்ந்து பாடியதே “சகலகலாவல்லிமாலை” ஆகும். இன்றும் மாணவர்கள் அறிவாலும், கலைகளாலும் சிறக்க வேண்டும் எனும் நோக்கில் பல கல்லூரிகளில் இப்பாடல் பாடமாக வைக்கப் பெற்றுள்ளதும் சிந்திக்க வேண்டியது.

## ஒட்டக்கூத்தர்

ஆயிரம் செங்குத்தர்களின் வெட்டிய தலைகளை கலைவாணியின் அருளால் ஒட்ட வைத்தவர் ஒட்டக்கூத்தர். அதனால் தான் அவர் பிறந்த ஊரான கூத்தனூரில் உள்ள புகழ்பெற்ற சரஸ்வதி கோயிலில் இன்றும் அவரது சிலை வைக்கப் பெற்றுள்ளதைக் காண்கிறோம்.

“பல மதங்கள் தோறும் பற்பல வடிவமாகி

அலகிலா விளையாட்டென்றும் ஆடிடும் முருகவேட்டு

நலமுறும் அனுசராள நம்குலமுதலி தங்கள்

தலையினை உடலிற் கூட்டித் தந்தருள் வாணித்தாயே” (Siva Kanniappan, 1998)

கலைமகளை வழிபட அனைத்து அதிசயங்களும் சாத்தியமாகும் என அறிகின்றோம்.

## பாரதியார்

கலைமகளைப் போற்றி வழிபட்டவர் மட்டுமின்றித் தன் பெயரையே கலைமகளின் பெயர்களுள் ஒன்றான “பாரதி” எனும் பெயரைத் தாங்கியவர் மகாகவி சுப்ரமண்ய பாரதியார் ஆவார்.

“தெளிவுறவே அறிந்திடுதல் தெளிவுதர மொழிந்திடுதல்”

நன்கு படித்த புலவர்களின் தொழில் என்றும், தாம் எழுதும் கலைகள் அனைத்திலும் கலைவாணியே குடியிருக்கிறாள் என்றும், மிகச் சிறந்த படைப்பான பஞ்சாலிசபதத்தை எழுத வாணியின் அருள் அவசியம் என்றும் பல இடங்களில் கலைமகளைப் போற்றிப் பாடுகிறார் பாரதியார்.

“வெள்ளைத் தாமரைப்பூவில் இருப்பாள்

வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்” (Ramaluctumanan, 2011)

இவ்வாறு கலைமகளின் அருள் பெற்ற அனைவருமே தம் வாழ்வில் புகழின் உச்சம் தொட்டனர் என்பதே உண்மை.

## முடிவுரை

கலைமகள் வழிபாடு என்பது ஆரம்ப காலங்களில் இல்லை என்றாலும் இடைக்காலத்திற்குப் பின்பு தோன்றிய கம்பர், ஒட்டக்கூத்தர், குமரகுருபரர் போன்றோர்களாலும் தற்காலக் கவிஞரான பாரதியாலும் போற்றி வழிபாடு செய்யப்பட்ட தெய்வம் கலைமகள். மேலும் இன்றைய சூழலில் மாணவர்களாலும் கலை நாட்டம் மிகுந்தோராலும் சரஸ்வதி பூசை போன்றவை சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றது. கூத்தனூரில் உள்ள புகழ்பெற்ற சரஸ்வதி ஆலயத்தில் உள்ள கலைமகளை வழிபட்டுப் பலரும் அவரது அருளைப் பெற்று வருகின்றனர் என்பதும் தற்காலத்தில் கலைமகள் வழிபாடு தமிழர் பண்பாட்டோடு இணைந்துவிட்டது என்ற உண்மையும் கண்டறியப்பெற்றுள்ளது.

## References

Balasubramaniyan, A. (2005) Sagalakalavallimalai, Sri Kasi Thirumadam, Thiruppanandal, India

Nadarajan, S. (2011) Ilakiyankal Potrum Kalaimagal, Saradhampal Pathippagam, Trichy, India

Rajagopalachariyar, (2002) Saraswathi Anthathi, Vanathi Pathippagam, Chennai, India

Ramaluctumanan, (2011) Bharathiar Kavithaigal, Uma Pathippagam, Chennai, India

Siva Kanniappan, (1998) Ottakoothar Padalgalum Vilakkamum, Muthamil Pathippagam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License